**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 146 of 2021

Deposition of P.W. 5

Name of the Witness: *திரு.சின்னசாமி*

Date : 17.09.2025

**குறுக்கு விசாரணை**

நான் தேங்காரத்துப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் நீதிமன்றத்தில் அழைப்பாணை பெற்று தான் சாட்சியம் அளிக்கிறேன். நான் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி. இந்த வழக்கில் எனக்கு அறிவிப்பு வந்தது, நான் பெற்று கொண்டேன். இந்த வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்திருந்தேன், நான் வெளியூரில் இருந்தேன், வழக்கை தொடர்ந்து நடத்தவில்லை. எனக்கு வழக்கு சங்கதிகள் தெரியும் என்றால் சரிதான். என் வழக்கறிஞரிடம் பதில் போட வேண்டும் என்று சொல்லியிருந்தேன், ஆனால் அவர் பதில் போடவில்லை என்று எனக்கு சமீபத்தில் தான் தெரிய வந்தது.

2) நான் என்னுடைய முதல் விசாரணையில் குப்பன் பெயரில் பட்டா உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2ம் வாதி நாகராஜ் என்னுடைய அப்பா, ருக்குமணி, லட்சுமி என்னுடைய அத்தைகள். என்னுடைய முதல் விசாரணையில் எங்கள் குடும்பத்திற்கு சர்வே எண் 352/1 குப்பனுக்கு பாத்தியம், சர்வே எண் 352/2 குப்பனின் அண்ணன் சின்னசாமிக்கும், அவரது தம்பி கோவிந்தசாமிக்கும் பாத்தியம்,

சர்வே எண் 352/3 பெருமாளின் வாரிசுகளுக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். சர்வே எண் 352/2, சர்வே எண் 352/3 விலைக்கு வாங்கிய சொத்துக்களா என்றால் பெருமாளின் பூர்வீக சொத்து. குப்பன் அவருடைய மகன்களுக்கு பாகபிரிவினை பத்திரம் மூலமாக சொத்துக்களை கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது.

3) 2ம் பிரதிவாதி என்னுடைய மனைவி. 2ம் பிரதிவாதி என்னுடைய மனைவி என்று நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லாமல் 3ம் நபர் போல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நானும் 2ம் பிரதிவாதியும் இரண்டு மாத காலம் இருந்தார். எங்கள் திருமண பந்தம் மூலமாக 2ம் பிரதிவாதிக்கு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த போது எனக்கு தகவல் தெரியவில்லை, ஆனால் பிறகு நான் பார்த்தேன். அந்த குழந்தையை வளர்ப்பதற்கு நான் இதுவரை எந்த பணமும் கொடுத்ததில்லை. என் குழந்தையை 2ம் பிரதிவாதி என் மனைவி தான் தற்போது வரை வளர்த்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு எந்த பாத்தியமும் இல்லை.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)